31.08.2023

சிசி.13/2021 அ.சா.1 சையது சுலைமான்

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி)

1) நான் ரூ.30 லட்சத்திற்கு அடமானம் வைத்ததாக சொல்லப்படும் சொத்தின் மதிப்பு ரூ.19,15,000/- ஆகும். மேற்படி சொத்து தொடர்பாக எனக்கும் காயத்ரி என்பவருக்கும் பிரச்சனை இருந்தது. அதை தீர்த்து தருவதாக கூறி தான் 1 மற்றும் 2 எதிரிகள் மேற்படி அடமான பத்திரத்தை ஒரு பெயருக்காக என்னிடம் எழுதி வாங்கினார்கள். 1, 2 எதிரிகள் மற்றும் மேற்படி காயத்ரியும் உறவினர்கள் ஆவார்கள். எதிரிகள் கூறியதுபோல் மேற்கண்ட பிரச்சனையை தீர்த்து கொடுக்கவில்லை.

2) எனவே எனது விற்பனையாளரான கிருஷ்ணவேணி என்பவரை அணுகி மேற்கண்ட பிரச்சனையை நீங்கள் தான் தீர்த்து கொடுக்கவேண்டுமென்று கேட்டபோது மீண்டும் அவர் எதிரிகளிடமே என்னை அனுப்பி வைத்தார். மேற்படி கிருஷ்ணவேணி அம்மாள் காயத்ரி மீது ஒரு தனிப்புகார் மனு ஒன்றை தாக்கல் செய்தார். மேற்படி கிருஷ்ணவேணி என்னிடம் மேற்படி காயத்ரி மீது சிவில் நீதிமன்றத்தில் விளம்புகை பரிகாரம் கோரி ஒரு வழக்கு தாக்கல் செய்ய சொன்னார். அதன்படி நான் அசல் வழக்கு எண்.62/2018 என்ற வழக்கினை கனம் உதகை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்படி காயத்ரி மீது வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கின் வாதுரை மற்றும் காயத்ரி தாக்கல் செய்த எதிருரையை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

3) மேற்கண்ட சிவில் வழக்கினை தாக்கல் செய்வதற்காக 1, 2 எதிரிகள் எனக்கு ரூ.1 லட்சம் செலவுக்காக கொடுத்தார்கள். மேற்கண்ட அடமான பத்திரத்திற்காக எதிரிகள் எனக்கு ரூ.30 லட்சமோ அல்லது வேறு எந்த ஒரு தொகையோ கொடுக்கவில்லை. எதிரிகளிடம் நீங்கள் கூறியதுபோல் மேற்கண்ட பிரச்சனையை தீர்த்துக் கொடுக்காததால் எனது சொத்தின் ஆவணங்களை திரும்ப கொடுக்குமாறு கேட்டேன். 2018லிருந்து 2020 வரை ஆவணங்களை திருப்பிக் கொடுக்க கேட்டேன். ஆனால் எதிரிகள்

ஆவணத்தை திருப்பிக் கொடுக்கவில்லை.

4) இந்நிலையில் 2019ம் வருடம் இறுதியில் எதிரிகள் எனது தோட்டத்திற்கு வந்து மேற்படி அடமான தொகையான ரூ.30 லட்சம் தொகை மற்றும் அதற்கு 4 சதவீதம் வட்டியுடன் கொடுக்க வேண்டுமென்று பிரச்சனை செய்தார்கள். இதனால் எனக்கு மனஉளைச்சல் அதிகமானது. இந்நிலையில் கொரோனா பெருந்தொற்று காலகட்டமான 2020ம் வருடம் மார்ச் மாதம் 20ம் தேதி வெலிங்டன் காவல்நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன். ஆனால் போலிசார் அதன்பேரில் நடவடிக்கை எடுக்க முடியாதென்று புகாரை திரும்ப கொடுத்துவிட்டார்கள்.

5) எனவே எதிரிகள் மீது பிரிவு.4 Tamil Nadu Prohibition of Charging Exorbitant Interest Act-இன்கீழ் தண்டிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை - இல்லை.

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்